# தமிழ் வளர்ச்சிக்காக மலேயாப் பல்கலைக்கழகத்துடன்

# தமிழ்ப் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இடையறாத முயற்சிகளால். மத்திய அரசின் செம்மொழி அறிந்தேற்பும் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தமிழ் மொழிக்குக் கிடைத்துள்ள நிலையில் முதன் முறையாகத் தமிழ் வளர்ச்சிக்காக வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மலேசிய நாட்டின் தொன்மையான, தலைசிறந்த பல்கலைக்கழகமாக விளங்கும் மலேயாப் பல்கலைக்கழகத்துடன் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ம. இராசேந்திரன் அவர்கள் 15.10.2008 ஆம் நாளன்று , மலேசியப் பேராசிரியர்கள் கல்வியாளர்கள், மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் மற்றும் தகவல் ஊடகத்தினர் முன்னிலையில் ஒப்பந்தம் செய்து கொண்டு வந்துள்ளனர்.

மலேசியத் தலைநகரான கோலாம்லம்பூரில் உள்ள மலேயாப் பல்கலைக்கழகம் 1949 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுள்ளது. 1962 முதல் தேசியப் பல்கலைக்கழகமாக விளங்கி வருகிறது. வெளிநாட்டு மாணவர்கள் 1500 பேரையும் சேர்த்து 30 ஆயிரம் மாணவர்கள் இப்பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றும் ஆய்வு மேற்கொண்டும் வருகின்றனர்.

மலாய் மற்றும் இசுலாமிய ஆய்விற்கென்று கழகங்களையும் (Academies), கலைகள் மற்றும் சமுக அறிவியல். மொழிகள் மற்றும் மொழியியல் ஆய்வுகள் போன்ற-வற்றிற்குப் பதின்முன்றுமூன்று புலங்களையும் (Faculties) ஆசிய ஐரோப்பிய ஆய்வு, சீன ஆய்வு ஆகியவற்றிற்கு இரண்டு நிறுவனங்களையும் (Institutes), பிற பல்கலைக்-கழகங்களுடனும் பிற நாடுகளுடன் இணைந்து கூட்டாக வேளாண்மை, பொருளாதாரம், உயிர் மருத்துவம், நானோ தொழில்நுட்பம், கடலியல் போன்ற ஆய்வுகளுக்கென்று மையங்களையும் (Centres) கொண்டுள்ள இப்பல்கலைக்கழகம் மொழி தொடர்பான ஆய்வுகளுக்கென்று முதன்முறையாகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் தற்போது ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

ரிடர்ஸ் டைஜஸ்டு, ஐடெக்ஸ் (ITEX) போன்ற அமைப்புகளின் விருதுகளைப் பெற்றுள்ளதோடு உலகப் புகழ்பெற்ற பேராசிரியர்களையும் கொண்டுள்ள இப் பல்கலைக்கழகம் அமெரிக்கா, ஜப்பான், கொரியா, பிரிட்டன், இலண்டன் போன்ற வெளிநாட்டுப்ப பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு ஆய்வுத்திட்டங்களை ஏற்கனவே மேற்கொண்டு வருகிறது. இந்தியாவில் ஆய்வினையும் மேற்கொண்டுவரும் இப்பல்கலைக்கழகம் முதன்முறையாக இந்திய நாட்டுப் பல்கலைக் கழங்களில் தமிழ்ப் பல்கலைக்கழகத்துடனேயே புரிந்துணர்வு ஆய்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ள விழைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

மலேயாப் பல்கலைக்கழகத்தின் கலைகள் மற்றும் சமூக அறிவியல், மொழிகள் மற்றும் மொழியியல் ஆய்வுப் புலங்களோடு (Faculties) தமிழ்ப் பல்கலைக்கழகத் துறைகள், தமிழ் மொழி, இலக்கியம், கலை, பண்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும், மலேசிய நாட்டு மொழிகள், கலைகளுடன் ஒப்பிட்டு ஆய்வுகளை மேற்கொள்ளவும் இலக்கியங்களை மொழிபெயர்த்துக் கொள்ளவும் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

மாணவர்கள், கல்வியாளர்கள் பரிமாற்ற அடிப்பபடையில் இங்கிருந்து அங்கு, அங்கிருந்து இங்கு வந்து ஆய்வுகளை மேற்கொள்ளவும், இரு பல்கலைக்கழகங்களும் இணைந்து கூட்டாக ஆய்வுத் திட்டங்களை மேற்கொள்ளவும், ஆய்வை மேம்படுத்திக் கொள்ளவும், வெளியீடுகள், ஆய்வறிக்கைகள், ஆய்வுத் துறைகள் தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளவும் இரு பல்கலைக்கழக இலக்குகளுக்கும் பயனளிக்கும் வகையில் பல்வேறு வகையான ஆய்வுத் திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வரும் ஐந்தாண்டுகளுக்குப் புல வள ஆதாரங்களின் அடிப்படையில் இப்புரிந்துணர்வு ஒப்பந்தம் வகை செய்கிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவரகளின் ஆணைப்படி கடந்த ஆண்டு (2007) மலேசியத் தமிழர் எழுத்தாளர் சங்கத்தைச் சேர்ந்த 30 பேரைத் தமிழ்நாடு அரசின் சார்பில் வரவேற்றுத் தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களில் அவரகளின் இலக்கியங்கள் குறித்து கருத்தரங்குகளை நடத்தியும், தமிழ்நாடு முழுவதும் அவர்களை அழைத்துச் சென்று நடத்திய விருந்தோம்பலும் வெளிப்படுத்திய நல்லெண்ண உணர்வுகளுக்கு மலேசிய – இந்தியத் தமிழர்களின் நீண்டகால இந்தக் கனவை தற்போது நிறைவேற்றியிருக்கிறது.